# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 92 — 1973 දෙසැම්බර් 28 වැනි සිකුරාදා — 1973.12.28

92 ஆம் இலக்கம் — 1973 ம ஆண்டு டிசெம்பர் மாதம 28 ந திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் ... | 1405 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் ... | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் ... | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் ... | 1412 | ஏலவிற்பனைகள் ... | 1413 |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் ... | — | நானாவித அறிவித்தல்கள் ... | — |


***கவனிக்க.***—ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தம்) சட்டமூலமும், வெளிநாட்டுச் செலாவணி தொடர்பில் மன்னிப்பளித்தல் (திருத்தம்) சட்டமூலமும், உள்ளூர்க் கடன்களும் அபிவிருத்தியும் (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### புத்தளம் மாவட்டத்திலுள்ள மாதம்பை விநியோக நிலையத்தில் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும் கையாளுவதற்குமான கேள்விப் பத்திரங்கள்

புத்தளம் மாவட்டத்திலுள்ள மாதம்பை விநியோக நிலையத்தில் பொருட்களை ஏற்றுவதற்கும் மற்றைய வேலைகள் செய்வதற்குமான கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட கொந்தருத்துக்காரர்களிடமிருந்தும், கிராமாபிவிருத்திச் சங்கங்களிடமிருந்தும், கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும், கூட்டுறவுத் தொழில் சங்கங்களிடமிருந்தும் 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) அரிசி, மா மற்றைய உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல், பங்கிடுதல் சம்பந்தமாகவுள்ள சேவைகள்;

(2) அரிசி, மா மற்றைய உணவுப் பொருட்கள் முதலியவற்றை மாதம்பை புகையிரத நிலையத்தில் இருந்து இறக்கி விநியோக நிலையத்திற்கு ஏற்றிச் செல்லுதல்.

2. 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் இந்தக் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். கொந்தருத்துக்காரர்கள் மேற்கூறியவற்றிற்கு கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபாய் 25.00 புத்தளம் கச்சேரியிலோ அல்லது வேறெந்த கச்சேரியிலோ செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தக் காரியாலயத்தில் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரமே இணைப்பிரதியுடன் நிரப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாதம்பை விநியோக நிலையத்தில் பொருட்களை ஏற்றிச் செல்லுவதற்கும் கையாளுவதற்குமான கேள்விப் பத்திரங்கள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் தபாலில் அனுப்பாதவர்கள், புத்தளம் கச்சேரியில் உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப் பத்திரக்காரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

4. காரணம் காட்டாமல் கேள்விப் பத்திரங்களில் ஏதாவதொன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ ஏற்றுக்கொள்ளவும் நிராகரிக்கவும் கேள்விப்பத்திர சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் பாதுகாப்புப் பணமாக ரூபா 250.00 செலுத்துதல் வேண்டும். கேள்விப் பத்திரக்காரர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவித்தல் கிடைத்த 7 நாட்களுக்குள் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக்காரருக்கு அவர் கொடுத்த விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் தெரிந்தெடுக்கப்பட்டதைக் கடிதமூலம் அறிவித்தால் கேள்விப் பத்திரக்காரர் ஏற்றுக்கொண்டார் என்று கருதப்படும். கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுபற்றி கடிதம் பெற்ற ஒருவர் ஒப்பந்தம் எழுதத் தவறுவாராயின், அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை இழக்க நேரிடும். தேர்ந்தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப் பணம், தேர்ந்தெடுக்கப்பட்டவர் பாதுகாப்புப் பணம் கட்டிய பின்னர் திருப்பிக் கொடுக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் இலங்கையரையே வேலைக்கு அமர்த்துதல் வேண்டும். கூலியாட்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கென இப்பொழுது நடைமுறையிலுள்ள சட்டங்கள் இனிமேலும் நடைமுறைக்கு வர இருக்கும் சட்டங்களுக்கு அமையவே இவ்வேலையை முடிப்பதற்கு தரமான வேதனம் வழங்குதல் வேண்டும்.

7. வேறு விபரங்களைப் புத்தளம் பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

எம். எஸ். சி. குணவர்தன,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,
புத்தளம் மாவட்டம்.

கச்சேரி,
புத்தளம், 1973.12.17.

12–1031—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு.
1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 10 ந் உ.

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

அறிவித்தல்

3,000 மெற்றிக் தொன் எம். எப். பத்திரிகைக் கடதாசியை தாள்களில் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

22½" × 35"/50—52 ஜிஎஸ்எம் அளவுடைய 3,000 மெற்றிக் தொன் எம். எப். வெள்ளைப் பத்திரிகைக் கடதாசியை 500 தாள்களாக றீம் பக்கெட்டுகளில் வழங்குவதற்கு விலைக் குறிப்பீடுகள் விலையுங் கேள்வுடன் கோரப்படுகின்றன.

1974 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் மாதம் ஒன்றிற்கு 250 தொன் கப்பற் சுமையாக ஒவ்வொரு மரக் கட்டுப்பலகையிலும் 10-12 றீம்கள் கொள்ளக் கூடியதாகக் கட்டி அனுப்ப வேண்டும்.

எழுத்திலான விலைக் குறிப்பீடுகள் முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் "தாள்களிலுள்ள பத்திரிகைக் கடதாசிக்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு, தலைவர், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், 356, யூனியன் பிளேஸ், கொழும்பு 2, இலங்கை என்று விலாசமிட்டு 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ம் திகதி பி. ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். கப்பல் தளம் மட்டும் இலவசம் மற்றும் கேள்வு ஆகியவை விலைக் குறிப்பீடுகளில் குறிப்பிடப்படல் வேண்டும்.

இணைப்படியுடனான மாதிரிகள் கேள்விப் பத்திரம் மூடப்படும் திகதிக்கு முன்பாக இக் கூட்டுத்தாபனத்திற்கு எவ்வித செலவும் ஏற்படாத வகையில் இக்காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

கடல் கடந்த தந்தி மூலம் அனுப்பப்படும் விலைக் குறியீடுகள் "ஈபெம்கோர்ப்" கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1973.12.17.

12—998—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

அஞ்சல் தொலைத்தொடர்பு திணைக்களம்

1. கப்பல் நிலையங்களுடன் தொழிற்படும் கரையோர நிலையங்களுக்கான உயர் அதிர்வெண் இரேடியோ உபகாரணம் (எச். எவ்.).
2. பேச்சு × இருமடி உபகரணமும்.
3. மல்ரிசனல் ஸ்ரேக்கபிள் கரியர் சிஸ்ரமும்.

வினியோகிப்பதற்கும் ஒப்படைப்பதற்கும்.

பின்வரும் விடயங்களை வினியோகிப்பதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1 அலுவலகம், 6-வது மாடி, நிருவாகப் பிரிவிலுள்ள அஞ்சல் தொலைத்தொடர்பு திணைக்கள கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 15.02.1974 மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. 10 வழிப்பாதைகளுடன் 2 ம் இல. உ. அ. இரேடியோ உபகரணம்.
   (அ) 1 ஆம் விடயத்திற்காக தொலைத்தொடர்பு ஏற்கும் கருவிகள் தொகை 2.
   (ஆ) இரேடியோ தொலைபேசி முனைக் கூறு.
   (இ) 1 ம், 2 ம் 3 ம் விடயங்களுக்கான ஸ்பெயர்சாண்ட் துணைக் கருவிகள்.
2. பேச்சு + இருமடி உபகரணம்.
   ஒரு வழிப்பாதை ஏற்படுத்தப்பட்டது தொகை 10
   இரு வழிப்பாதை ஏற்படுத்தப்பட்டது தொகை 5
3. மல்ரிசனல் ஸ்ரேக்கபிள் கரியர் சிஸ்ரம்.
   கிடைக்கப்பெற்ற ஏற்படுத்திய அட்டவணைக் கேற்ப தொகை 2.

மேற்கூறப்பட்ட தொகைகளை அதிகரிக்கவும் குறைக்கவும் பிரதான தொலைத்தொடர்பு எந்திரிக்கு உரிமை உண்டு.

கொழும்பு 1, லோற்றஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகம், 5-ம் மாடியில் உள்ள பிரதான தொலைத் தொடர்பு எந்திரியின் அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட படிவங்களில் இரட்டைப் பிரதிகளில் கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். அவரிடம் சகல விபரங்களும் தகவல்களும் பெற்றுக்கொள்வதுடன் கேள்விப்பத்திர சாதனங்களும் பரிசீலனை செய்யலாம்.

கொழும்பு 1, ம. த. அ. தந்திக் காசாளரிடம் அல்லது ஒரு அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபரிடம் ரூபா 250/- கேள்விப்பத்திர வைப்புப் பணமாக செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை பிரதான தொலைத் தொடர்பு எந்திரியின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் ஆர்வமுள்ள கேள்விப்பத்திரதாரர்களுக்கு 31.01.1974 நண்பகல் 12.00 மணிவரை கேள்விப் பத்திர சாதனங்கள் வழங்கப்படும்.

ஏ. ஆர். எம். ஜெயவர்த்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைத்தொடர்புக் கண்காணிப்பாளரும்.

நிருவாகக் கிளை,
6-வது மாடி,
அ. தொ. தலைமை அலுவலகம்,
லோற்றஸ் வீதி,
கொழும்பு1.

12—873—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

வவுனியா பகுதி—பசும்பால் விநியோகம்—1974

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1974 ம் வருடம் பெப்பிரவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து வவுனியாப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (அ) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சர் அலுவலகங்களில் கேள்விகள் முடியும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டிராதவர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன் கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிரும்பும் சுகாதார சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிருபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்கவேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், வவுனியா என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும், கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் மு. ப. 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம்வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச் சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் வவுனியாப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

த. சண்முகநாதன்,
பதில் சுகாதாரசேவை அத்தியட்சகர், வவுனியா.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
வவுனியா,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந உ.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

| | சேவை | பிரிவு | மாதாந்த உத்தேசத் தொகை ரூபா | கேள்வி மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 1. | மாங்குளம் புகையிரத நிலையத்திலிருந்து முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கும் பின்பு அங்கிருந்து முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. .. . | முல்லைத்தீவு .. | 7,000 | .. 16.1.74 |
| 2. | வவுனியா அரசினர் பண்ணையிலிருந்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கும் பின்பு அங்கிருந்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. .. .. .. | வவுனியா .. | 1,500 | .. 16.1.74 |

12-918—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

**சௌக்கியத் திணைக்களம்**

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்—1974

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 01 ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ந் திகதி 1974 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சர், வவுனியா ஏற்றுக்கொள்வார்.

2. (அ) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

அனுமதி பெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேலே குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப்பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்ப வேண்டும்.

(ஆ) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சர் அலுவலகங்களில் கேள்விகள் முடியும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனதிற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்புகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், வவுனியா என்ற முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதியில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்கு குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இலங்கையில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) கேள்விக்காரர்கள் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 3½ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) நோயாளியின் கூப்பனுக்கு உணவுக்கட்டுப்பாட்டதிகாரியினுல் விநியோகிக்கப்படும் அரிசிக்கு அதற்கேற்ப பாகுபாடான விலையை ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து அறவிடப்படும்.

(iii) உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்பொழுதுள்ள 9 அவுன்ஸ் அரிசி அளவிலிருந்து 7 அவுன்ஸ் அரிசி அளவாகத் திருத்தப்பட்டிருக்கின்றபடியால் சோறுடன் விநியோகிக்கப்படும் பாண் தேவைப்படமாட்டாது.

(iv) உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினுல் விலை குறைக்கப்படாத வீதத்தில் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினுல் அன்றன்று விதிக்கப்படும் விலைக்கு பணம் கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தகாரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தகாரர் பணம் செலுத்த வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(v) வேலையாட்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தகாரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்று போன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையுங் கழிக்கப்படும்

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினுல் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

(இ) வேலையாட்களுக்கு பாண் உணவு வழக்கம்போல் கொடுக்கப்படும். கொடுக்கவேண்டிய உணவுப்பொருட்களில் ஒரு மாற்றமும் கிடையாது, ஆனல் பிறகு அளவு மட்டும் குறைக்கப்பட்டிருக்கின்றது.

(ஈ) கூப்பன்களை கொடுத்தோ கொடுக்காமலோ வேலையாட்களுக்கு அரிசி உணவு கொடுப்பது என்று பின்னர் தீர்மானித்தால் அரிசியின் விலைக்கும் கொடுக்கப்படாத பாணின் அளவின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து அறவிடப்படும் வேலையாட்களுக்கு தேவையான அரிசியை ஒப்பந்தக்காரரே கொள்வனவு செய்யவேண்டும்.

14. ஒப்பந்தக்காரர் அண்மையிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடையில் அல்லது நெல் கொள்வனவு செய்யும் சபையிலிருந்து கொள்வனவு செய்யவேண்டும். போக்குவரத்துக் கூலியோ ஏற்றுமதி இறக்குமதி கூலியோ கொடுக்கப்படமாட்டாது.

த. சண்முகநாதன்,
சௌக்கிய சேவை அத்தியட்சகர்.

வவுனியா,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் வ.

**குறித்த அட்டவணை**

| (1) | (2) | (3) | (4) | (5) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | | | |
| | | | | வேலைக்காரர்கள் | | | | | நோயாளிகள் | | | | |
| தாபனங்கள் வவுனியாப் பகுதி | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | மீன் | மாட்டிறைச்சி | முட்டை | கருவாடு | காய்கறி | மீன் | மாட்டிறைச்சி | முட்டை | கருவாடு | காய்கறி |
| அடம்பன் வைத்தியசாலை .. | 100 | 800 | | 1,800 | | 700 | 300 | 2,100 | 2,650 | | 1,250 | 500 | 3,750 |
| முருங்கன் வைத்தியசாலை .. | 100 | 800 | | 1,050 | | 520 | 525 | 1,560 | 2,000 | | 525 | 230 | 2,150 |
| தலைமன்னர் வைத்தியசாலை .. | 100 | 600 | | 400 | | 400 | 720 | 1,200 | 360 | | 360 | 720 | 1,080 |
| செட்டிகுளம் கிராமிய வைத்தியசாலை .. | 100 | 800 | | 760 | | 370 | 390 | 1,150 | 1,400 | | 750 | 760 | 2,200 |
| பேசாலை கிராமிய வைத்தியசாலை .. | 100 | 600 | 16.1.74 | 850 | | 400 | 420 | 1,225 | 700 | | 340 | 400 | 1,100 |
| புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலை .. | 100 | 600 | காலை | 80 | | 75 | 150 | 240 | 115 | | 100 | 210 | 350 |
| சிலாபத்துறை கிராமிய வைத்தியசாலை .. | 100 | 600 | 10 மணி | 525 | 175 | 500 | 700 | 1,500 | 900 | 300 | 400 | 1,200 | 1,200 |
| விடத்தல்தீவு கிராமிய வைத்தியசாலை .. | 100 | 400 | | 480 | | 250 | 250 | 840 | 1,325 | | 700 | 720 | 2,050 |
| மாங்குளம் பிரசவ விடுதி .. | 100 | 400 | | 35 | | 32 | 32 | 130 | 30 | | 30 | 30 | 125 |
| நெடுங்கேணி பிரசவ விடுதி .. | 100 | 400 | | 135 | | 36 | 35 | 35 | 110 | | 55 | 70 | 50 |
| பூவரசன்குளம் பிரசவ விடுதி .. | 100 | 400 | | 90 | | 45 | 70 | 130 | 60 | | 20 | 25 | 80 |
| பாவற்குளம் பிரசவ விடுதி .. | 100 | 400 | | 40 | | 20 | 20 | 60 | 65 | | 30 | 35 | 60 |

12-911—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

சௌக்கியத் திணைக்களம்

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ந் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ந் திகதி 1974 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சர், புத்தளம், ஏற்றுக்கொள்வார்.

2. **(க) கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்தவொரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேற் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்ப வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், புத்தளம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள்பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாடு "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து, அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. **(i)** கேள்விக்காரர்கள் குறிக்கப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 3½ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**(ii)** உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்பொழுதுள்ள 9 அவுன்ஸ் அரிசி அளவிலிருந்து 7 அவுன்ஸ் அரிசி அளவாகத் திருத்தப்பட்டிருக்கின்றபடியால் சோற்றுடன் விநியோகிக்கப்படும் பாண் 1972 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து தேவைப்படமாட்டாது.

**(iii)** உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அன்றன்று விதிக்கப்படும் விலைக்கு பணம் கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர் பணம் செலுத்த வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iv) வேலையாட்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தகாரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்றுபோன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையும் கழிக்கப்படும் ;

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினுல் விநியோகிப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

புத்தளம்,
1973 ம் ஆண்டு டிசம்பர் மீ 17 ந உ.

அ. அருமநாயகம்,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

குறித்த அட்டவணை

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | வேலைக்காரர்கள் | | | | | நோயாளிகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | முட்டை | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | முட்டை |
| கல்பிட்டி வைத்தியசாலை .. | 100 | 800 | 4.1.73 | 300 | 300 | 200 | 700 | 300 | 1,000 | 1,000 | 700 | 200 | 700 |
| கொட்டுக்கச்சி கி. வை. .. .. | 100 | 800 | காலை 10 | 200 | 200 | 200 | 800 | 200 | 1,000 | 800 | 800 | 200 | 700 |
| நாவத்தேகம கி. வை. .. .. | 100 | 800 | மணி | 300 | 300 | 300 | 1,200 | 200 | 1,300 | 1,200 | 1,200 | 2,400 | 700 |
| உடப்பு கி. வை. .. .. | 100 | 600 | | 300 | — | 200 | 1,000 | 200 | 1,000 | — | 800 | 2,000 | 800 |
| மாம்புரி கி. வை. .. .. | 100 | 600 | | 150 | 150 | 100 | 800 | 100 | 400 | 400 | 400 | 900 | 300 |
| மஹகும்புக்கடவல பி. வி. .. | 100 | 300 | | 50 | 50 | 50 | 800 | 150 | 10 | 10 | 10 | 20 | 10 |
| ஆனமடுவ வைத்தியசாலை .. | 100 | 800 | | 450 | 450 | 450 | 1,350 | 450 | 2,500 | 2,500 | 2,500 | 7,500 | 2,500 |
| கல்முறுவ வைத்தியசாலை .. | 100 | 800 | | 200 | 200 | 200 | 600 | 200 | 800 | 800 | 800 | 2,400 | 800 |
| டன்கொட்டுவ வைத்தியசாலை .. | 100 | 800 | | 300 | 300 | 300 | 900 | 300 | 2,100 | 2,000 | 2,000 | 6,000 | 2,000 |
| மாதம்பே வைத்தியசாலை .. | 100 | 800 | | 200 | 200 | 200 | 600 | 200 | 750 | 750 | 750 | 2,250 | 750 |
| முந்தல் வைத்தியசாலை .. | 100 | 800 | | 250 | 250 | 250 | 750 | 250 | 1,100 | 1,100 | 1,100 | 3,300 | 1,100 |

12–945—28.12.73 ம் திகதிய வர்த்தமானி இல. 92

---

## கடற்றொழில் திணைக்களம்

### இலங்கை கடற்றொழில் திட்டம்

*பெற விரும்பும் பொருள்கள்.*—இலங்கை கடற்றொழில் திட்டத்தை நிறைவேற்றுமுகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி, அதனது விசேட நிதிகளிலிருந்து இலங்கைக் குடியாசிற்குச் செய்துள்ள கடன் பணத்தை கடற்றொழில் இயக்குநர் பெற்றுக் கொள்வார். இப்பணம் கீழ் தரப்பட்டிருப்பனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக கடற்றொழில் இயக்குநரால் பயன்படுத்தப்படும்.

(அ) 200 கடலக டீசல் இன்ஜின்கள் (ப. வ. 25/33) மாற்றுறுப்புகளுடன்;

(ஆ) பொலிஸ்ரர் றெசின், பைபர் கிளாஸ் துணைப்பொருள்கள், 200, 28 அடி மீன்பிடிக் கலன்களை அமைப்பதற்குத் தேவையான பொருள்கள்;

(இ) மேற்படி கலன்களுக்குத் தேவையயான மீன்பிடிக் கருவிகள்; நைலோன் கில் வலை உள்ளடங்க (துணைக்கருவிகளுடன்);

(ஈ) 10 ஜீப் வாகனங்கள், 10 இழுவண்டிகள், மாற்றுறுப்புகள், கருவிகள், துணைக்கருவிகள்;

(உ) 10 இன்சுலேட்டட் ½ தொன் வான்கள்.

2. *தகைமையுடைய கேள்விகாரர்கள்.*—மேற்படி பொருள்களை வழங்கும் பொருட்டு, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், பின்லாந்து, ஜேர்மன் சமஸ்டிக் குடியாசு, இத்தாலி, ஜப்பான், நெதலண்ட்ஸ், நியூசிலாந்து, நோர்வே, சுவிட்சிலாந்து, ஐக்கிய இராச்சியம், ஆசிய அபிவிருத்தி வங்கியில் அங்கத்துவம் வகிக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாகிய அப்கானிஸ்தான், வங்களாதேஷ், பிரிட்டிஷ் சொலமன் தீவுகள், பேர்மா, சீனக்குடியரசு, வீஜி, கொங்கொங், இந்தியா, இந்தோனேசியா, கேமர் குடியரசு, கொரியா குடியரசு, லாவோஸ், மலேசியா நேபால், பாகிஸ்தான், பப்புவா, நியூகினி, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் தாயிலாந்து, ரொங்கா இராச்சியம், வியட்நாம் குடியரசு, மேற்கு சமோவா ஆகிய தகைமையுடைய நாடுகளிலுள்ள தனிப்பட்டோர்கள், பங்காளர்கள் அல்லது யாக்கங்களிலிருந்து கேள்விகள் விரைவில் அழைக்கப்படும். தகைமையுடைய நாடுகள் தயாரிக்கப்படும் பொருள்களை வழங்கும்பொருட்டு இலங்கையில் உள்ள கேள்விகாரர்களிடமிருந்தும் கேள்விகள் அழைக்கப்படும். இலங்கை அரசின் தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் பெயர் காணப்படும் எந்த ஒரு நபர், தொழில் நிலையம் அல்லது யாக்கம் கேள்விகளை அனுப்பத் தகைமையற்றவராவர். தேவையான தகைமைகள் தொடர்பான மேலதிக விபரங்கள் கேள்விப் பத்திரங்களில் தரப்படும்.

3. கொடுக்கப்படும் ஒப்பந்தங்கள்—மேலே பந்தி 1 (அ) முதல் (உ) வரை விபரிக்கப்பட்ட ஐந்து வகுதிப் பொருள்களில் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஒப்பந்தம் கொடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. *கேள்விப் பத்திரங்கள்*—ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் வெவ்வேறுன கேள்விப் பத்திரங்கள் தேவைப்படும். இவ்வறிவித்தல் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் சகல ஒப்பந்தங்களும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தம் தொடர்பான கேள்விப் பத்திரங்களை, வேண்டிய கேள்விப் பத்திரங்கள் தொகுதி ஒவ்வொன்றிற்கும், திரும்பி மீளளிக்கப்படாத இலங்கைப் பணம் ரூபா 250/- அல்லது அமெரிக்க டாலர் 25 (அல்லது அதற்குச் சமமான ஏதாவது மாற்றக் கூடிய நாணயம்) உடன் கீழே தரப்பட்டிருக்கும் முகவரிக்கு எழுத்துமூலம் வேண்டி, கடற்றொழில் இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இலங்கை அரசின் தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் பெயர் காணப்படும் எந்த ஒரு நபருக்கோ, தொழில் நிலையத்திற்கோ அல்லது யாக்கத்திற்கோ கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

5. கேள்விகள் 1974.04.03 ந் திகதி 10.00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

வி. எல். சி. பீற்றர்ஸ்,
பதில் கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
த. பெ. இல. 531,
காலிமுகம்,
கொழும்பு 3, இலங்கை.
தொலைபேசி—27431
திகதி—1973.12.21.

12–932—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

### இலங்கை கடல்தொழில் கூட்டுத்தாபனம்

கடற்பாவனைக்கான நிறப்பூச்சுகள் வழங்குவதற்கும் ஒப்படைப்ப தற்குமான கேள்விப்பத்திரம்

தலைவர், கேள்விச்சபை, இலங்கை கடல்தொழில் கூட்டுத்தாபனம், ரெக்கவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15, அவர்களால் கடற்பாவனைக் கான நிறப்பூச்சுகள் வழங்குவதற்கான பொறியிடப்பட்ட கேள் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்களும், மேலதிக விவரங்களும் கீழொப்பமிட்ட வரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள், 4.1.74 பி.ப. 2.30 மணிக்கு முடிவுபெறும்.

கேள்விப்படிவங்கள், 3.1.74 பகல் 12.00 மணிவரை கொடுக்கப் படும்.

வழங்கல், களஞ்சிய முகாமையாளர்.

வழங்கல் களஞ்சியப் பகுதி,
ரெக்கவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15,
1973 டிசெம்பர் 17.

12–993—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 1974.01.23 ஆம் தேதி மு.ப. 10.00 மணிவரை பின்வரும் வேலைக் கான வேறான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளு வார்.

| விவரணம் | ஒப்பந்தக்காரர்களின் ஆகக் குறைந்த பதிவுத் தொகை ரூபா |
|---|---|
| 1. மகியங்கனைச் சாலை—வேலைக்களக் கட்டடங்கள், நேர அலுவலகம், வேலி ஆகியன அமைத்தல். ... | 1,75,000/- |

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப் படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன் இவரின் அலுவலகத்தில் பட வரைவுகளையும் பரி சீலனை செய்யலாம். ஒவ்வொரு வேலைக்கும் எதிராகக் காட்டப் பட்ட தொகைக்காக இ.போ.ச. வில், அரசாங்கத் திணைக்களங்க ளில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தேவையான கேள்விப் பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக 1 ஆம் விடயத்துக்கு ரூபா 200/- க்கான மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட் டுப்பணப் பற்றுச்சீட்டையும், மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணமாக 1 ஆம் விடயத்துக்கு ரூபா 40/- க்குமான பற்றுச்சீட்டையும் 1974.01.22 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவ தன்பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வி யிடுபவர்கள் தங்களது சான்றுரேலைகளைப் பரிசோதனைக்குக் காட்ட வேண்டும். அவ்வித சான்றுரேலைகள் பிரதம சிவில் பொறியியலாள ரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே கேள்விப்பத்திரக் கட்டுப் பணத்தைக் காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத் தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

12–995—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 74.01.30 ஆந் தேதி மு.ப. 10.00 மணிவரை, 1974 ஆண்டுக்கான வசுச் சீட்டுக்களை அச்சிட்டு வழங்குவதற்காகப் பொறியிட்ட கேள் விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

74.01.29 ஆந் தேதி நண்பகல் 12.00 மணிவரை பொரலஸ் கமுவை, வெரகெரை, வர்த்தகப் பிரிவிலுள்ள, வர்த்தக முகாமை யாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில் கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு, இரட்டைப் பிரதிகளில், அனுப்பப்படவேண்டும். மீளளிக்கப்படக்கூடிய கேள் விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- ஐயும் மீளளிக்கப்பட மாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 10/- ஐயும் பொர லஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரின் அலு வலகத்தில் காசாகக் கட்டி இதற்கான பற்றுச்சீட்டைக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன் காட்டவேண்டும்.

மேலதிக விவரங்களை, பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வர்த்தக முகாமையாளர்.

வெரகெரை,
பொரலஸ்கமுவை,
73.12.07.

12–994—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் ஹல்மில்ல/குலான்ஹிக்/மகோகனி/சற்றின்/ஹொரு அல்லது வேறெந்த II ஆம் வகுப்பு மரத்தையும் அறுப்பதற்கு 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆந் தேதி மு. ப. 10.00 மணிவரை பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

குறித்த முடிவுத் தேதிக்கு முந்தின நாள் பி. ப. 3.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். ஒவ் வொரு தொகுதிக் கேள்விப் பத்திரங்களுக்கும் மீளளிக்கப்பட மாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணம் 10 ரூபாவைக் காசாகக் கட்ட வேண்டும். மேற்கூறப்பட்ட கேள்வி சம்பந்தமாக கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் 100 ரூபாவை பொரலஸ்கமுவை வெர கெரையிலுள்ள பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் காசாகக் கட்டி அவ்விதம் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கேள்விப் பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்ட வேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வர்த்தக முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வர்த்தகப் பிரிவு,
வெரகெரை, பொரலஸ்கமுவை,
14 திசம்பர் 1973.

12–996—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

*வெற்றுத் தார்ப் பீப்பா, வெற்றுச் சீமெந்துப்பை வாங்குவதற்கும் எடுத்துச் செல்வதற்குமான கேள்விப் பத்திரம்—மேல் மாநிலம்*

*1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 88 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பெற்ற, மேற்குப் பிராந்தியத்திலுள்ள வெற்றுத் தார்ப் பீப்பா, வெற்றுச் சீமெந்துப் பை வாங்குவதற்கும் எடுத்துச் செல்வதற்குமெனக் கேள்விப் பத்திரம் கோரிய கேள்வி அறிவித்தலுக்கும் கவனம் ஈர்க்கப்படுகின்றது.*

*2. கேள்விப் படிவங்கள் வழங்குவதற்கான திகதி 12.01.74 வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் 15.01.74 பி. ப. 2.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 15.01.74 பி. ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும்.*

*கிறிஸ்தோபர் பீரிஸ்,*
*மேல் மாநில வேலைகள் பணிப்பாளர்.*

*வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,*
*கொலிஸ்ரன் இடம்,*
*கொழும்பு 7,*
*18.12.73.*

12–974—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

*அரசாங்க விநியோகத் திணைக்களம்*

*உபயோகிக்கத்தகாத பொருட்களின் ஏல விற்பனை*

*இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உபயோகிக்கத்தகாத பொருட்கள் 1974 ம் ஆண்டு சனவரி மாதம் 22 ம் திகதி சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள அரசாங்க விநியோகத் திணைக்கள வளவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.*

*2. கேள்வியில் வெற்றிபெறுவோர் விற்பனைக்குப் பின் ரொக்கப் பணத்தை முற்றாகச் செலுத்தி பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்தல் வேண்டும்.*

*3. இந்த விற்பனையை ரத்துச் செய்வதற்கோ அன்றி பின்போடுவதற்கோ இல்லாவிடின் எந்த விலைக் கேள்வியையும் நிராகரிப்பதற்கோ அரசாங்க விநியோகத் திணைக்களப் பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.*

*4. விற்பனை முதல் நாளன்று மு. ப. 9.00 மணிக்கும் பி. ப. 2.30 மணிக்கும் இடையில் கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள அரசாங்க விநியோகத் திணைக்கள அலுவலகத்தில் இப் பொருட்கள் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டிருக்கும்.*

*5. மேலதிக தகவல்களை மேற்படி அலுவலகத்தில், அலுவலக உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*எஸ். ஏ. பீ. ரூபசிங்க,*
*அரசாங்க விநியோகப் பணிப்பாளர்.*

*அரசாங்க விநியோகத் திணைக்களம்,*
*த. பெ. 418,*
*கொழும்பு 2,*
*1973 டிசெம்பர் 28.*

12–1034—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

*மா ஏல விற்பனை—வன திணைக்களம்*

*(1) முதிரை, பாலை, விளினை, பானக்க, பசறி, சண்பகம், தியமீ, மஞ்சட்கடம்பை, அயில் ஆகிய இனங்கள் அடங்கிய 142 மரக் குத்திகளும் (2215.6 கன அடி),*

*(2) விளினை, பசறி, சண்பகம், கிறிகொண், மஞ்சட்கடம்பை ஆகிய இனங்கள் அடங்கிய 7593 அரிந்த மரத் துண்டுகளும் (2867.4 கனஅடி), 31.12.73 ம் திகதி காலை 10 மணிக்கு வெள்ளவாயாவில் வத்த என்னும் இடத்திலுள்ள வன திணைக்களத்தின் கந்தபாங்கல தேக்கு நாற்று நிலையத்திற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.*

*மேலதிக விபரங்களை நுவரேலியாப் பகுதி வன உத்தியோகத்தரிடமிருந்து அல்லது மொனறாகலை வீச்சிட உத்தியோகத்தரிடமிருந்து அல்லது வெள்ளவாயாவில் வத்த என்னும் இடத்திலுள்ள தேக்கு நாற்று நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*வீ. ஆர். நாணயக்கார,*
*வன பாதுகாவல் அதிபருக்காக.*

*வனபாதுகாவல் அதிபர் அலுவலகம்,*
*த. பெ. இல. 509,*
*கியூ ரோட்,*
*கொழும்பு 2.*

12–944—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

---

*இராணுவ தலைமைக் காரியாலயம்*

*ஏல விற்பனை—பாவனைக்கு தகுதியற்ற வாகனங்கள்*

*கீழ் குறிப்பிடப்பட்ட பாவனைக்கு தகுதியற்ற மோட்டார் வாகனங்கள் 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு, ஹோமாகம, பனாகொட, இராணுவ முகாமையில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ போர் ஆயுத பண்டசாலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

| | எண்ணிக்கை |
|---|---|
| 1. மோட்டார் சைக்கிள் (பீ. எஸ். ஏ) ... | 16 |
| 2. உத்தியோகத்தர் கார் வண்டி "போர்ட் பேயர்லேன்" ... | 01 |
| 3. விலிஸ் ஸ்டேஷன் வெகன் ... ... | 01 |
| 4. லேண்ட் ரோவர் ... ... | 01 |
| 5. விலிஸ் ஜீப் ... ... ... | 11 |
| 6. தேம்ஸ் டிரேடர்—3 தொன் ... ... | 02 |
| 7. தேம்ஸ் டிரேடர்—4 தொன் ... ... | 01 |
| 8. போர்ட்சன் தேம்ஸ்—3 தொன் ... ... | 04 |
| 9. விலிஸ் ஜீப்—சீ. பி. சீ ... ... ... | 09 |

*மேற்கூறிய வாகனங்கள் ஏலத்தில் வாங்கியவர்கள் அதற்குரிய முழுத் தொகையையும் அதே தினம் செலுத்தி, மாலை 3.30 மணிக்கு அகற்றிச்செல்ல வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*விற்பனைக்குரிய வாகனங்கள் 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 3.30 மணிவரை ஹோமாகம, பனாகொட, இராணுவ போர் ஆயுத பண்டசாலையில் பார்வையிடலாம்.*

*ஈ. டி. த. இசட் அபேசேகர,*
*கர்னல்,*
*இராணுவ தளபதிக்காக.*

*இராணுவ தலைமைக் காரியாலயம்,*
*தபால் பெட்டி இல. 553,*
*கொழும்பு,*
*73.12.18.*

12–975—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

# ஏலவிற்பனைகள்

### பகிரங்க ஏலவிற்பனை

கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள்ளே கீரசகலை தெரு ஓரமாகவுள்ள 7 ஏ. 1 ரூ. 25 பே. விஸ்தீரணமுள்ள காணியும், நன்கு அமைந்துள்ள 19 வங்களாக்களும் ஏலத்தில் விற்பனை.

கீழே தரப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியையும், வளவுகளையும் பகிரங்க ஏலவிற்பனை செய்வதற்காக தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. தனபால முதியான்செலாகே நந்திசேன அவர்களிடமிருந்து எனக்குக் கிடைக்கப்பெற்ற அதிகாரத்தின் பிரகாரம், கண்டி, எலகல்ல தோட்டத்தில் வசிக்கின்ற நூருள் ஜபிதா வஹாப், உடுமா லெப்பை அலிம் சைபோ அப்துல் வஹாப் (கணவன்) (மனைவி) ஆகிய இருவரிடமிருந்தும் வரவேண்டியதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. டீ. எஸ். வீரசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1962 அக்டோபர் 6 ம் தேதிய 179 ம் இல, குறைநிரப்பு முறியின்பேரிலும், கண்டி பிரசித்த நொத்தாரிசு திரு. ஈ. டீ. டெயிலர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1955 யூலை 28 ம் தேதிய 280 ம் இல. ஈட்டு முறியின் பேரிலும் 1973 அக்டோபர் 6 ம் தேதிவரை பணம் செலுத்தத் தவறியதன் காரணமாக, அத்தகைய மீளப் பெறுகைக்காக தேசிய வீடமைப்பு ஆணையாளரால் பெறப்பட்ட செலவுகளோடு விற்பனைத் தேதிவரை, 1973 அக்டோபர் 6 ம் தேதி தொடக்கம் ஒரு ஆண்டுக்கு 4½% ப்படி ரூபா 188,895/60 ல் மேலதிக வட்டியோடும், மூன்னூற்று எண்பத்திநான்காயிரத்து நூற்றிப்பதினாறு ரூபா ஐம்பத்தொன்பது சதத்தையும் (ரூபா 384,116/59) மீளப்பெறுவதற்காக, நான் அதே இடத்தில் 1974 ம் ஆண்டு ஜனவரி 12 ம் தேதி சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன். உறுதி மேற்பார்வைக்கு அல்லது வேறு விபரங்களுக்கு என்னிடமிருந்தோ அல்லது சேர் சித்தம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 2 இல் இருக்கின்ற தேசிய வீடமைப்பு ஆணையாளரிடமிருந்தோ அறியலாம்.

அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவரவின் கங்கவத்தை கோறளை போவலையில் அமைந்துள்ளதும், கண்டி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் அ 102/157 உரித்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. ஏ. ஆர். சீ. கெயில் அவர்களால் ஆக்கப்பட்ட 1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் 13 ம் தேதி இடப்பட்ட 1010 ஆம் இல. நில அளவை வரை படத்தின் பிரகாரம் ஏழு ஏக்கர் ஒரு ரூட்டு இருபத்தைந்து பேர்ச்சர்ஸ்கள் (ஏ. 7 ரூ. 1 பே. 25) விஸ்தீரணம் கொண்டதும், சொல்லப்பட்ட 1 ம் கூறு பிராஞ்சிஸ் கங்காணியின், ஆதனத்தை வடக்கெல்லையாகவும் ஏபா முதலாளியின் ஆதனத்தைக் கிழக்கெல்லையாகம் சொல்லப்பட்ட இரண்டாம் கூறு கால்வாயைத் தெற்கெல்லையாகக் கொண்டதும், கால்வாயையும், டாக்ரர் அலமேடாவுக்கு இப்போது சொந்தமான ரூஸ்வத்தையையும், மேற்கெல்லையாகவும் கொண்டதும், அதன்கண் கட்டப்பட்ட கட்டங்களுடன் சேர்ந்த எலஎல்ல தோட்டத்தின் அவ்வாறு பிரிக்கப்பட்ட 1ம் கூறு முழுமையும்)

எஸ். சோமரட்ன,
உத்தரவுபெற்ற ஏலதாரர்/மதிப்பாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

88, ஜோர்ச் ஈ. டீ. சில்வா மாவத்தை,
கண்டி, 1973.12.17.

12–86—28.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 92

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற்பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1974

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** | **4.1.74** | வெள்ளி | **26.12.73** | புதன் | ந. ப. 12.00 |
| | **11.1.74** | வெள்ளி | **2.1.74** | புதன் | ந. ப. 12.00 |
| | **18.1.74** | வெள்ளி | **9.1.74** | புதன் | ந. ப. 12.00 |
| | **25.1.74** | வெள்ளி | **16.1.74** | புதன் | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** | **1.2.74** | வெள்ளி | **23.1.74** | புதன் | ந. ப. 1.200 |
| | **8.2.74** | வெள்ளி | **30.1.74** | புதன் | ந. ப. 12.00 |
| | **15.2.74** | வெள்ளி | **5.2.74** | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | **22.2.74** | வெள்ளி | **13.2.74** | புதன் | ந. ப. 12.00 |
| **மாச்சு** | **1.3.74** | வெள்ளி | **19.2.74** | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | **8.3.74** | வெள்ளி | **27.2.74** | புதன் | ந. ப. 12.00 |
| | **15.3.74** | வெள்ளி | **6.3.74** | புதன் | ந. ப. 12.00 |
| | **22.3.74** | வெள்ளி | **13.3.74** | புதன் | ந. ப. 12.00 |
| | **29.3.74** | வெள்ளி | **20.3.74** | புதன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யு. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 21 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.